என். கௌதமன் முன்னிலை! திருமருகல் ஒன்றியம் ஏனங்குடி, அம்பல், போலகம்,

எரவாஞ்சேரி, கொட்டாரக்குடி ஊராட்சிகளில் மக்களுடன் முதல்வர் திட்ட முகாம்!

அமைச்சர் கோவி. செழியன் தொடங்கி வைத்து நல திட்ட உதவிகளை வழங்கினார்!

நாகை . பிப்.4

நாகை மாவட்டம் திருமருகல் ஊராட்சி ஒன்றியம் ஏனங்குடி, அம்பல், போலகம், எரவாஞ்சேரி, கொட்டாரக்குடி ஆகிய ஊராட்சிகளில் மூன்றாம் கட்டமாக "மக்களுடன் முதல்வர்" திட்ட முகாமினை உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் தொடங்கி வைத்தார்.

நாகை மாவட்டம் திருமருகல் ஊராட்சி ஒன்றியத்தில் ஏனங்குடி, அம்பல், போலகம், எரவாஞ்சேரி, கொட்டாரக்குடி ஆகிய 5 ஊராட்சிகளில் மூன்றாம் கட்ட மக்களுடன் முதல்வர் திட்ட முகாம் நடைபெற்றது. மக்களுடன் முதல்வர் திட்ட முகாம்களுக்கு நாகை மாவட்ட ஆட்சித்தலைவர் ப.ஆகாஷ் தலைமை தாங்கினார். தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழக தலைவர் என்.கௌதமன்;, நாகை சட்டமன்ற உறுப்பினர்

ஜெ.முகம்மது ஷா நவாஸ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மக்களுடன் முதல்வர் திட்ட முகாமை

உயர்கல்வித்துறை அமைச்சர் தொடங்கி வைத்து மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் திறன்பேசி, மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரம் போன்ற வைகளையும், வருவாய்துறை சார்பில்இலவச வீட்டுமனை பட்டா ஆணையினையும், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தில் புதிய வைப்பு தொகைக்கான இரசீதினையும், தாட்கோ சார்பில் தமிழ்நாடு தூய்மை பணியளர் நலவாரியத்தின் மூலம் வழங்கப்படும் முதல்வரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்ட அட்டை ஆய்வுரை வழங்கி பேசுகையில்

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் நலனை கருத்தில்கொண்டு புதுமைப்பெண் திட்டம், மகளிர் உரிமைத்தொகை, மக்களை தேடி மருத்துவம் போன்ற பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில் மக்களை தேடி எல்லாம் கிடைக்கும் வகையிலும், மக்களின் சிரமங்களை குறைக்கும் வகையிலும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் மக்களுடன் முதல்வர் திட்டம் கோயம்புத்தூர், தர்மபுரி மாவட்டத்திலும் தொடங்கி வைத்ததையடுத்து, பல்வேறு திட்டங்களின் பயன்களை பெறுவதற்கு ஏதுவாக தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் இம்முகாமினை நடத்துவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் உத்தரவிட்டுள்ளார்.

அதனைதொடர்ந்து நாகை மாவட்டத்தில் உள்ள திருமருகல் ஊராட்சி ஒன்றியம், ஏனங்குடி ஊராட்சியில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் இத்திட்டத்தினை தொடங்கி வைத்ததுடன், அம்பல் ஊராட்சியில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, போலகம் ஊராட்சியில் உள்ள அரசினர் உயர்நிலைப்பள்ளியில், எரவாஞ்சேரி ஊராட்சியில் உள்ள உத்தூர் மாரியம்மன் கோவில், கொட்டாரக்குடி ஊராட்சியில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி ஆகிய இடங்களில் இத்திட்ட முகாம் தொடங்கி வைத்து, பார்வையிடப்பட்டது.

இம்முகாம்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்த ப்பட்டோர்மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, கூட்டுறவுஉணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, எரிசக்தித் துறை, உள்மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேமலாண்மைத் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை, சமூக சீர்த்திருத்தத்துறை, மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, வேளாண்மைஉழவர் நலத்துறை, கால்நடை பராமரிப்பு,பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆகிய 15 துறைகள் சார்ந்த 44 சேவைகள் தொடர்பான கோரிக்கைகள் குறித்த மனுக்கள் இம்முகாம்களில் பெறப்பட்டு 30 நாட்களுக்குள் தீர்வு காணப்படும்.

இதில், மேற்கண்ட துறைகள் தொடர்பான சேவைகளை பொதுமக்கள் பெறுவதற்கு ஏதுவாக, அனைத்து ஏற்பாடுகளும் சம்மந்தப்பட்ட துறைகள் செய்திருந்தனர். அதன்படி, பல்வேறு துறைகள் பங்கேற்றுள்ள "மக்களுடன் முதல்வர்" திட்ட முகாமின் வாயிலாக பெறபட்ட மனுக்களில், தகுதியுடைய மனுக்கள் மீது உடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு தீர்வு வழங்கப்படும்.

இதுபோன்று, தங்களது பகுதிகளில் நடைபெறும் முகாம்களில் கோரிக்கை மனுக்கள் அளிக்க வரும் பொதுமக்கள் தங்களது கோரிக்கையினை கணினியில் பதிவு செய்ய ஆதார் அட்டை, குடும்ப அட்டை, கைபேசி எண் மற்றும் கோரிக்கை தொடர்பான உரிய ஆவணங்களுடன் மனுக்களை அளித்து, தங்களது கோரிக்கைகளை நிவர்த்தி செய்து கொள்வதற்கு ஏதுவாக இம்முகாமினை பயன்படுத்திக்கொள்ளலாம் என உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் பேசினார். உதவிகளை மாண்புமிகு உயர்கல்வித்துறை

அதைத் தொடர்ந்து திருமருகல் ஊராட்சி ஒன்றியம், ஏனங்குடி, அம்பல், போலகம், எரவாஞ்சேரி, கொட்டாரக்குடி ஆகிய ஊராட்சிகளில் நடைபெற்ற முகாமில் சுமார் 2000 மேற்பட்ட மனுக்கள் பெறப்பட்டு அவற்றில் ஒரு சில மனுகளுக்கு உடனடி தீர்வாக மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, வருவாய் துறை போன்ற துறைகள் சார்பில் தீர்வு காணப்பட்டு நலதிட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் ஒன்றிய கழக செயலாளர்கள் திருமுருகல் வடக்கு செல்வ.செங்குட்டுவன் திருமருகல் தெற்கு ஆர்.டி.எஸ். சரவணன், மாவட்ட கழக அவைத்தலைவர் ப.செல்வம், துணை செயலாளர் ஆரூர் மணிவண்ணன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ப.கோவிந்தராஜன், க.ராஜேந்திரன், மாநில மீனவர் அணி துணை செயலாளர் ஜி.மனோகரன், நாகை நகர மன்ற தலைவரும், நகர கழக செயலாளர் இரா.மாரிமுத்து,, கீழ்வேளூர் தெற்கு ஒன்றிய செயலாளர் கே பழனியப்பன், பொதுக்குழு உறுப்பினர்கள் பன்னீர்செல்வம் எஸ்.பி.டி.. சார்லஸ், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் பி.என்.கார்த்தி, அ.பாரி பாலன், இளம்.சுந்தர், பெ ஆனந்த் (எ)முருகானந்தம், ஆர். துரைராஜ், தமயந்தி, மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் கலைச்செல்வி திருமுருகன் தெற்கு ஒன்றிய நிர்வாகிகள் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ஏ.எஸ்.அருண், ஒன்றிய துணை செயலாளர் துரையரசன்,மாவட்ட பிரதி ரமேஷ் கண்ணா திருமருகல் வடக்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் Iமற்றும் ஒன்றிய,கிளைக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் முன்னாள் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்

பேரறிஞர் அண்ணா 56 ஆம் ஆண்டு நினைவு நாள்:

அண்ணா உடலால் மறைந்தார்; தொண்டால் நம்மிடையே வாழ்கிறார்!

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி புகழாரம்!

சென்னை, பிப். 4 -

பேரறிஞர் அண்ணா நினைவு நாளையொட்டி, திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு: -

இன்று (3.2.2025) அறிஞர் அண்ணாவின் 56 ஆம் ஆண்டு நினைவு நாள்! இது ஒரு வரலாற்றுக் குறிப்பே தவிர, அன்று மட்டும்தான் அண்ணாவின் ஆற்றல்கள் - சாதனைகள் - சிறப்புகளைக் கூறி, மற்ற நாள்களில் வாளா இருப்பது என்பதல்ல. திராவிடர் எழுச்சியை பறைசாற்றுவன!

திராவிடர் இயக்கம் பழைய நீதிக்கட்சியாகி, பிறகு வளர்ந்து, மக்கள் இயக்கமாகி மாற்றப்பட்ட பிறகும், சுயமரியாதை இயக்கம், திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் என்று பல வகையில் பெருகி, இரட்டைக் குழல் துப்பாக்கியாகி, இன்றும் "மானமும், அறிவும்" வளர்ச்சி பெற்ற சமுதாயமாக திராவிடர் சமுதாயம் முன்னேறி வருவதற்கு அய்யாவுடன் பணிபுரிந்து, பட்டி தாயுதத்தால் ஆரியத்தின் அடிவேரை ஆட்டி அசைத்திட்ட அண்ணாவின் ஆற்றல்கள்தான் 56 ஆண்டுகளாக ஓர் அரை நூற்றாண்டு திராவிடர் இயக்கம் அடிக்கட்டுமானமும், அதன்மீது எழுந்த பெரும் கட்டுமானமாக திராவிடர் எழுச்சியை பறைசாற்றுவன!

"அண்ணா மறைந்தார்; அண்ணா வாழ்க!"

அறிஞர் அண்ணா மறைந்த செய்தி கேட்டு, அறிவு ஆசான் தந்தை பெரியார் சிறப்பான தலைப்பிட்டு தந்தை, தனயனின் துயர் துடைத்து பாராட்டி வழியனுப்பும் வேளையில்,

"அண்ணா மறைந்தார்; அண்ணா வாழ்க!" என்று தலைப்பிட்டு எழுதிய அறிக்கை ஒன்றே அய்யாவின் முன்னோக்கை எதிர்காலத்திற்கும் எடுத்துக்காட்டாக திகழும்.

திராவிட இயக்கம் ஒரு கண்ணாடிப் பேழையல்ல; மாறாக கடும் உழைப்பால், தொண்

சரித்திரம் படைத்த, படைக்கும் சாதனைகள் நாளும் ஊற்றாகி உலகை உலா வருகின்றன!

தந்தை பெரியாரும், அறிஞர் அண்ணாவும் அவர்களது தொடர்ச்சியான ஆட்சியை மீட்சியாக காத்து, வளர்த்த மானமிகு சுயமரியாதைக்காரர் கலைஞரும், அவருக்குப் பின்னால் 'திராவிட மாடல்' ஆட்சியின் உறுதியான மேல்தளம் அமைத்து, திக்கெட்டும் புகழ் பரப்பும் 'திராவிட மாடல்' வலிவுடனும், பொலிவுடனும் திராவிடர் இயக்கத்தை எதிர் நீச்சலடித்து சளைக்காது செய்து சரித்திரம் படைத்த, படைக்கும் சாதனைகள் நாளும் ஊற்றாகி உலகை உலா வருகின்றன!

ஆம்! "அண்ணா மறைந்தார்; அண்ணா வாழ்க!" என்பதன் பொருள் மக்கள் மனதில் காலத்தை வென்று என்றும் நிறைந்தார் என்பதாகும்.

அண்ணா என்ற கேப்டனின் கப்பல், எத்தனை புயல் வந்தாலும், பெரியார் என்ற கலங்கரை வெளிச்சத்தின் துணையோடு, கரை நோக்கிய அதன் பயணத்தை நிச்சயம் வெற்றிகரமாக நடத்தும் என்பதால், மத வெறி, ஜாதி வெறி, ஆரிய மாயையை வென்று இலக்கை அடைவது உறுதி! உறுதி!!

அண்ணா வாழ்க! வாழ்கவே!

இவ்வாறு கி.வீரமணி குறிப்பிட்டுள்ளார்.

மனவளர்ச்சி குன்றியோர் மாற்றுத்திறனாளிகள் வாழ்விலும் ஏற்றம் தரும் திராவிடமாடல் அரசு!

கோட்டூர் வடக்கு ஒன்றியத்தில் மறுவாழ்வு இல்லக் கட்டிடம்!

அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா – பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டினர்!

திருவாரூர், பிப். 4 -

இந்தியாவே போற்றும் வகையில் அனைத்துத் தரப்பு மக்களின் தேவைகளையும் பூர்த்தி செய்யும், "எல்லோருக்கும் எல்லாம்" எனும் கோட்பாடு கொண்ட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசு மனவளர்ச்சி குன்றியோர் மாற்றுத்திறனாளிகள் வாழ்விலும் ஏற்றம் தரும் அரசாகவும் திகழ்கிறது.

கோட்டூர் வடக்கு ஒன்றியத்தில் மனநலம் பாதிக்கப்பட்டோர் ,மனவளர்ச்சி குன்றியோருக்கான இல்லம் அமைக்க திராவிட மாடல் கொடுத்த திட்டத்தின் அடிப்படையில் அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா , பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. ஆகியோர் அடிக்கல் நாட்டியதோடு மாற்று திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளையும் வழங்கினர்.

திருவாரூர் மாவட்டம்,கோட்டூர் வடக்கு ஒன்றியப்பகுதியில் உள்ள கண்டமங்கலம் ஊராட்சி சேரியில் மனநலம் பாதிக்கப்பட்டோர் , மனவளர்ச்சி குன்றியோருக்கான இல்லம் அமைக்கும்கட்டிடப்பணிகளுக்கு தொழில் முதலீடு மற்றும் ஊக்குவிப்பு துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே. கலைவாணன் ஆகியோர் அடிக்கல்நாட்டினர். நிகழ்வில் மாவட்ட ஆட்சியர் சாருஸ்ரீ, ஒன்றிய செயலாளர் பால.ஞானவேல், மனோலயம் தொண்டு நிறுவன இயக்குனர் முருகய்யன் மற்றும் அரசு அலுவலர்கள் பங்கேற்றனர்.

மேலும் மன்னார்குடி வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மாற்றத்திறனாளிகளுக்கு மூன்று சக்கர மோட்டார் வாகனம் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் 70 மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்கு ரூ.48 லட்சத்து 57 ஆயிரத்து 800 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர். டி.ஆர்.பி.ராஜா, பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ. ஆகியோர் வழங்கினர்.

13 பயனாளிகளுக்கு விபத்து இறப்பு நிவாரண தொகைக்கான ஆணையினையும், மாற்றுத்திறனாளிகளுக்கான நலவாரிய கல்வி உதவித்தொகை 7 நபர்களுக்கும், முதுகு தண்டுவடம் பாதிக்கப்பட்டவருக்கான தண்ணீர் படுக்கை பெறுவதற்கான நிதியுதவி 7 நபர்களுக்கும் வழங்கப்பட்டது.

பின்னர் மன்னார்குடி வட்டம், காரிக்கோட்டை ஊராட்சியில் சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.30 லட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்ட சமுதாய கூடம் மற்றும் ரூ.11 லட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்ட நியாய விலைக் கடையினையும் திறந்து வைத்தார்கள்.

அதனைத்தொடர்ந்து, ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில், திடக்கழிவு மேலாண்மையில் தன்னிறைவு பெறுவதற்காக கிராமப்புறங்களில் குப்பைகளை விரைந்து கொண்டு செல்வதற்கு ஏதுவாக மன்னார்குடி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளுக்கு 24 எண்ணிக்கையிலான மின்கலன் மூலம் இயங்கும் வண்டிகளை தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர். டி.ஆர்.பி.ராஜா வழங்கினார்.

நிகழ்வுகளில் மாவட்ட ஊராட்சி முன்னாள் தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, ஒன்றிய செயலாளர்கள் பால.ஞானவேல், வீ.எஸ்.ஆர்.தேவதாஸ், டி.எஸ்.டி. முத்துவேல்,நா.கவியரசு, சித்தேரி சிவா, கே.வி.கே. ஆனந்த், தலைமை செயற்குழு உறுப்பினர் ஞானசேகரன்,நகர்மன்ற தலைவர்மன்னை.த.சோழராஜன்,நகர செயலாளர் வீரா.கணேசன், சட்டத்திருத்தக்குழு உறுப்பினர் பி.ராஜ மாணிக்கம், பொதுக்குழு உறுப்பினர்கள் காஞ்சித்துரை, கலைவாணி மோகன், மாவட்ட அமைப்பாளர்கள் பகலவன், வி.கே.முருகானந்தம், பி.ஜி.ஆர்.ராஜாராமன் மற்றும் கழக நிர்வாகிகள் ,கழக தோழர்கள் அரசு அதிகாரிகள் பங்கேற்றனர்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் 56 வது நினைவு நாளை முன்னிட்டு கலைஞர் நகர் சிவன் பூங்கா அருகில் உள்ள அருள்மிகு ஸ்ரீ விநாயகர் திருக்கோயிலில் மற்றும் கோயம்பேடு குறுங்காலீஸ்வரர் திருக்கோயிலில் அமர்ந்து சமபந்தி விருந்தில் விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகரராஜா கலந்து கொண்டார். இந்நிகழ்வில் தலைமை பொதுக்குழு உறுப்பினர் உ.துரைராஜ், வட்டக் கழகச் செயலாளர் பொன் வர.லோகு எம்.சி, மாவட்டக் கழக துணைச் செயலாளர் வாசுகி பாண்டியன், வட்டக் கழகச் செயலாளர்கள் பூக்கடை பழனிச்சாமி, இரா.சொழியன், சோ.செந்தில்குமார், ஐம்பு முருகன் மற்றும் ராமமூர்த்தி, மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் சசிகுமார் உள்ளிட்ட கழகத்தினர், பொதுமக்கள் பலர் உடன் இருந்தனர்.

சேலம் மாவட்டத்தில்

மரவள்ளிக் கிழங்கு விலை நிர்ணயம் தொடர்பான கூட்டம்!

மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெற்றது!

சேலம், பிப். 4 -

மரவள்ளி கிழங்கு விலை நிர்ணயம் செய்வது தொடர்பான முத்தரப்பு கூட்டம் 05- 02- 2025 புதன்கிழமை அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர். இரா. பிருந்தாதேவி, தலைமையில் நடைபெற உள்ளது என சேகோசர்வ் மாவட்ட வருவாய் அலுவலர்/செயலாட்சியர் திருமதி இரா.கீர்த்தி பிரியதர்சினி தகவல் தெரிவித்துள்ளார்.

சேலம் மாவட்டத்தில் மரவள்ளி கிழங்கு விலை நிர்ணயம் செய்வது தொடர்பான முத்தரப்பு கூட்டம் 05.02.2025 புதன்கிழமை அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, தலைமையில் மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற உள்ளது.

இதுகுறித்து சேகோசர்வ் மாவட்ட வருவாய் அலுவலர்/செயலாட்சியர் திருமதி. இரா.கீர்த்தி பிரியதர்சினி தெரிவித்துள்ளதாவது:

சேலம் மாவட்டத்தில் மரவள்ளி கிழங்கிற்கு விலை நிர்ணயம் செய்வது தொடர்பாக மரவள்ளி பயிரிடும் விவசாயிகள், ஜவ்வரிசி உற்பத்தியாளர்கள் மற்றும் ஜவ்வரிசி வியாபாரிகள் பங்கேற்கும் முத்தரப்பு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்இரா.பிருந்தாதேவி, தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வரும் 05.02.2025 புதன்கிழமை அன்று மாலை 04.00 மணிக்கு நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் சேகோசர்வ் செயலாட்சியர், தோட்டக்கலை துணை இயக்குநர், மற்றும் வேளாண்மை துணை இயக்குநர் உள்ளிட்ட தொடர்புடைய அரசு அலுவலர்கள் கலந்து கொள்ள உள்ளனர்.

இக்கூட்டத்தில் சேலம் மாவட்டத்தில் மரவள்ளி பயிரிடும் விவசாயிகள், ஜவ்வரிசி உற்பத்தியாளர்கள், ஜவ்வரிசி மற்றும் ஸ்டார்ச் வியாபாரிகள் ஆகியோர் கலந்து கொள்ளலாம்.

இவ்வாறு சேகோசர்வ் மாவட்ட வருவாய் அலுவலர்/செயலாட்சியர் திருமதி இரா.கீர்த்தி பிரியதர்சினி அவர்கள் தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில்

மக்கள் குறை தீர்க்கும் முகாம்!

நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் வழங்கினார்!

காஞ்சிபுரம், பிப்.4-

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக மக்கள் நல்லுறவு மைய கூட்டரங்கில் நடைபெற்ற வாராந்திர மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. கலைச்செல்வி மோகன் மாற்றுத்திறனாளிகளுக்கு ரூபாய் 2,42,840 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக மக்கள் நல்லுறவு மைய கூட்டரங்கில் நடைபெற்ற வாராந்திர மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நேற்று (03.02.2025) மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.கலைச்செல்வி மோகன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட ஆட்சியரகத்தில் உள்ள மக்கள் நல்லுறவு மையத்தில் பிரதி திங்கட்கிழமை தோறும் பொதுமக்களிடம் இருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு, அம்மனுக்கள் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு வழங்கி தீர்வு காணப்பட்டு வருகிறது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமை வகித்து பொதுமக்களிடம் இருந்து 436 மனுக்களை பெற்று அவற்றின் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இன்று நடைபெற்ற வாராந்திர மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 2 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூபாய் 2,,39000 மதிப்பீடு கொண்ட புதியதாக வடிவமைக்கப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் மதிப்பீடு கொண்ட வழங்கப்பட்டது. 1 மாற்றுத்திறனாளிக்கு ரூபாய் 3840 மதிப்பீடு கொண்ட காதணி கருவி வழங்கப்பட்டது. மொத்தம் ரூபாய் 2,42,840 மதிப்பீடு கொண்ட உதவிகள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் செ.வெங்கடேஷ், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி. க.ஆர்த்தி, உதவி ஆட்சியர் (பயிற்சி திருமதி.நமிருணாளினி, மாவட்ட வழங்கல் அலுவலர் சி.பாலாஜி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்கு பகுதி தி.மு.க.சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 56ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, திருவொற்றியூர் தேரடி சன்னதி தெருவில் அமைந்துள்ள திராவிட முன்னேற்றக் கழக பணிமனையில், பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவ படம் மற்றும் திருவொற்றியூர் கிழக்கு பகுதி 8வது வார்டு, டி.எச்.ரோடு பெரியார் நகர் அருகில் உள்ள, பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு சென்னை மாநகராட்சி 1வது மண்டல குழு தலைவர், கிழக்கு பகுதி செயலாளர், தி.மு.தனியரசு மாலை அணிவித்து, மரியாதை செலுத்தினார். இதில் சென்னை வடகிழக்கு மாவட்ட அவைத்தலைவர் குறிஞ்சி எஸ்.கணேசன், பொதுக்குழு உறுப்பினர் டி.ஏ.ராஜ் ,சாந்தி பக்தன் கிழக்கு பகுதி அவைத்தலைவர் ஆர்.சி.ஆசை தம்பி, கிழக்கு பகுதி துணை செயலாளர் எம்.வீ.குமார் கே.பிரபாவதி பொருளாளர் இரா.குமரேசன் மற்றும் கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட மீஞ்சூர் பேரூர் திமுக சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 56 வது நினைவு நாள் முன்னிட்டு அமைதி பேரணி நிகழ்வு அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் வழிகாட்டுதல்படி மாவட்ட கழகச் செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ ஆலோசனை படி நடைபெற்றது. இதில் மீஞ்சூர் பேரூர் கழகச் செயலாளர் க.சு. தமிழ்உதயன் தலைமையில் மீஞ்சூர் பஜார் வீதியில் அமைதி பேரணியாக சென்று மீஞ்சூர் பேருந்து நிலைய அருகில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருஉருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர் அருகில் நிர்வாகிகள் மீவி. கோதண்டன், கவுண்டர் பாளையம் சீனிவாசன், சிவராமன், ஆல்பட்ராஜ், மணிமாறன், எஸ்.கணேஷ், மோகன், எழிலரசன், நா. மோகன்ராஜ் டி.எஸ். கதிரவன், ஆ. ஜோசப், என்.கோபால், இராமகிருஷ்ணன், ஆவின் வெங்கடேசன், ஜோதி ஸ்ரீதர், ராமகிருஷ்ணன், காவி, புருஷோத்தமன், இளங்கோவன், ராஜன், நித்திய குமார், இந்துஸ்தான், சீனிவாசன், பாளையம், எம்.தாஸ், கே.ராஜேஷ், சந்திரமோகன், எஸ்.சுந்தர், சேகர், எழிலரசன், புகழேந்தி, முத்துகுமார், தமிழரசன், சாமுவேல், கலாநிதி, திவாரி, வக்கீல் இளங்கோ, புவனேஸ்வரன், ரமேஷ், அருள்நிதி, சண்முக சுந்தரம், அண்ணாமலை, ஜெயக்குமார், ஐயப்பன், சிற்றரசு, அறிவு ஒலி, ஜோதி டைல்ஸ் ரமேஷ், சுரேஷ் உள்பட பலர் உள்ளனர்.